**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**EA. No. 39/2019 in EP.66/2016 in OS.105/2015**

| | | DEPOSITION OF WITNESS | RW.1 |
|---|---|---|---|
| NAME | பழனி | TALUK | |
| HUSBAND NAME | | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 15.07.2025.

**எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை :–**

1. நான் குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் அலுவலகத்திற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தது. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க சார்பதிவாளர் எனக்கு அனுமதி அளித்துள்ள கடிதம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சம்மனில் கோரியுள்ள 3 அடமானபத்திரம் மற்றும் வில்லங்க சான்றின் சான்றிட்ட நகலை எடுத்து வந்துள்ளேனா என்றால் எடுத்து வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படுவது 3697/1999 என பதிவு செய்யப்பட்ட அடமானப்பத்திரத்தின் சான்றிட்ட உண்மை நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படுவது 3698/1999 என பதிவு செய்யப்பட்ட அடமானப்பத்திரத்தின் சான்றிட்ட உண்மை நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படுவது 3699/1999 என பதிவு செய்யப்பட்ட அடமானப்பத்திரத்தின் சான்றிட்ட உண்மை நகல் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படுவது சர்வே எண். 741, 742, 743 01.01.1999 முதல் 02.09.2024 வரையான வில்லங்க சான்றிதழ் என்றால் சரிதான், அதில் 01.01.1975 முதல் 19.03.2025 வரையான வில்லங்க சான்றிதழை சமர்ப்பித்துள்ளளேன். மேற்படி ஆவணம் எ.சா.ஆ.5.

3. எ.சா.ஆ.2 ஆவணமானது கணேசன் மனைவி சாலம்மாள் சொக்கலிங்கம் என்பவருக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 30000/– ரூபாய்க்கு அடமானத்திற்காக எழுதப்பட்டது

என்றால் சரிதான். மேற்படி ஆவணம் சர்வே எண்.741, 742, 743–க்காகவும், கதவு எண்.4/741, 5/742, 6/743–க்காக எழுதப்பட்டது என்றால் சரிதான். எ.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி சொத்து சாலம்மாளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளார் என்றால் ஆவண எண்.954/1934 மற்றும் 1762/1941–ன் படி பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளார்.

4. எ.சா.ஆ.3 ஆவணம் சர்வே எண்.741, 742, 743–க்காகவும், கதவு எண்.4/741, 5/742, 6/743–க்காக எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் 27000/– ரூபாய்காக அடமானம் எழுதப்பட்டது. அந்த ஆவணம் 09.08.1999 அன்று கணேசன் மனைவி சாலம்மாள் மாலதி என்பவருக்கு எழுதி கொடுத்தது. எ.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்படி சொத்து சாலம்மாளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளார் என்றால் ஆவண எண்.954/1934 மற்றும் 1762/1941–ன் படி பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளார்.

5. எ.சா.ஆ.4 ஆவணம் சர்வே எண்.741, 742, 743–க்காகவும், கதவு எண்.4/741, 5/742, 6/743–க்காக எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் 25000/– ரூபாய்காக அடமானம் எழுதப்பட்டது. அந்த ஆவணம் 07.08.1999 அன்று கணேசன் மனைவி சாலம்மாள் துரைசாமி என்பவருக்கு எழுதி கொடுத்தது. எ.சா.ஆ.4 ஆவணத்தில் மேற்படி சொத்து சாலம்மாளுக்கு எப்படி பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளார் என்றால் ஆவண எண்.954/1934 மற்றும் 1762/1941–ன் படி பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளார்.

6. சாலம்மாள் மேற்படிக்கு ஒரே சொத்தை வெவ்வேறு தேதிகளில், வெவ்வேறு நபர்களுக்கு 3 அடமான பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எ.சா.ஆ.5 வில்லங்க சான்றில் மேற்படி 3 அடமானங்களும் பைசல் செய்யப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி 3 அடமான பத்திரங்களும் கதவு எண்.7 பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

7. ஆவண எண்.3699/1999 எ.சா.ஆ.4 ஆவணம் 07.08.1999 தேதியிட்ட பத்திரத்தில் முன்சீப் கோர்ட்டில் ஓ.எஸ்.நம்பர் 938/1982 படி நடந்துவரும் வியாஜ்ஜித செலவுகளுக்காக அடமானம் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1999 ஆண்டுகளில் பத்திரபதிவு நடைமுறை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் அசல் ஆவணம் இல்லாமல் பத்திரப்பதிவு செய்யப்படும் என்றால் சார்பதிவாளர் அசல் ஆவணத்தை சரிபார்த்துவிட்டு கொடுத்துவிடுவார்.

8. 3 அடமான பத்திரங்களிலும் மேற்படி சொத்து சாலம்மாள் பெயரில் உள்ளதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 3 அடமான பத்திரங்களிலும் சாட்சி கையெழுத்து அருணகிரி மற்றும் பெருமாள் ஆகியோர் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 3 அடமான பத்திரங்களிலும் காளத்தி என்பவர் வரைவு செய்து குமார் என்பவர் தட்டச்சு செய்துள்ளார் என்றால் சரிதான். 3 ஆவணங்களும் 07.08.1999, 08.08.1999, 09.08.1999 தேதியிட்டது என்றால் சரிதான்.

9. அந்த காலகட்டத்தில் பதிவு செய்வதற்கு அடையாள அட்டை அவசியம் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அடமான பத்திரத்தில் மேற்படி சொத்தை கோவிந்தன் அனுபவித்து வந்த பிறகு சாலம்மாளுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்காக வாரிசுசான்றிதழ் பதிவு செய்யும்போது ஆஜர்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்படவில்லை.

10. எ.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழில் பத்திர எண்.3119/1979 பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் உள்ளது. அதில் சர்வே எண், கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் கதவு எண்.6/743, சர்வே எண்.743 என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் மீனாட்சி, மஞ்சுளா, பாபு, நாககிருஷ்ணா, தாயம்மாள் ஐந்து பேரும் சேர்ந்து மாணிக்கவாசகன் என்பவருக்கு எழுதி கொடுத்ததாக உள்ளது.

11. எ.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழில் பத்திர எண்.2138/1979 பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் உள்ளது. அதில் சர்வே எண், கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் கதவு எண்.6/743, சர்வே எண்.743 என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் பங்காரு அம்மாள் என்பவர் மாணிக்கவாசகன் என்பவருக்கு எழுதி கொடுத்ததாக உள்ளது.

12. எ.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழில் பத்திர எண்.4033/2017 பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் உள்ளது. அதில் சர்வே எண், கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் புதிய கதவு எண்.7, சர்வே எண்.740/2, 741, 742, 743/6 என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்தது என்றால் செல்வி (எ) செல்வம் என்பவர் பச்சயப்பன் என்பவருக்கு எழுதி கொடுத்ததாக உள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் மறுவிசாரணை :–</u>**

13. 1999 காலகட்டத்தில் நான் அரசு பணியில் சேரவில்லை என்றால் சரிதான். நான் எப்போது பணிக்கு சேர்ந்தேன் என்றால் 2014ஆம் ஆண்டு. அதனால் 1999 காலகட்டத்தில் பத்திரம் பதிவு செய்ய அசல் ஆவணம் தொடர்பாகவும், வாரிசு சான்றிதழ் தொடர்பாகவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.